செய்தி வெளியீடு எண்:907 நாள்:20.10.2021

**தமிழ்நாட்டில் பரவலாக பெய்து வரும் கனமழை குறித்து மேற்கொள்ள வேண்டிய ஆயத்த பணிகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் அவர்கள் 20.10.2021 அன்று நடத்த உள்ள பத்திரிக்கையாளர் சந்திப்பு தொடர்பான குறிப்பு**

அக்டோபர் மாதம் துவங்கி டிசம்பர் மாதம் வரை நீடிக்கும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு, 448.0 மி.மீட்டர் மழை இயல்பாக கிடைக்கப் பெறுகிறது. இது தமிழ்நாட்டின் வருடாந்திர இயல்பான மழை அளவில், 47.32 விழுக்காடு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில், புயல் மற்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாவதோடு, தொடர்புடைய சில பகுதிகளில், கன மழை முதல் மிக கன மழை ஏற்படுகிறது. வட கிழக்கு பருவமழைக் காலத்தில், குறிப்பாக கடலோர மாவட்டங்களில் இந்த பருவமழையின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

வடகிழக்கு பருவமழை அக்டோபர் 3 ஆம் வாரத்தில் துவங்கக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ள நிலையில் தற்போது நிலவிவரும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக 16.10.2021 அன்று கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி ஆகிய மாவட்டங்களில் சராசரி மழை அளவை விட அதீத கனமழை மற்றும் மிக கனமழை பெய்துள்ளது. இதனை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்சொன்ன மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி மூலம் ஆய்வு மேற்கொண்டு நிவாரண பணிகளை துரிதப்படுத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

முன்னதாக கடந்த 24.09.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்த பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி விரிவான அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். மேலும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் 11.09.2021 அன்று முப்படையினைச் சார்ந்த அலுவலர்கள் உட்பட ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்களுடன் கூட்டம் நடத்தி அனைத்து தரப்பினரும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதித்து முடிவுகள் எட்டப்பட்டுள்ளது.

01.06.2021 முதல் 30.09.2021 வரையிலான தென்மேற்கு பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு 393.4 மி.மீ. மழை கிடைக்கப் பெற்றுள்ளது. இது, தென்மேற்கு பருவமழை காலத்தில் கிடைக்கப் பெற வேண்டிய இயல்பான மழையளவான 336.0 மி.மீட்டரை விட 17 விழுக்காடு கூடுதலாகும். இந்த தென்மேற்கு பருவமழை காலத்தில் 34 உயிரிழப்புகளும், 180 கால்நடை இறப்பு, 58 குடிசைகள் / வீடுகள் முழுமையாகவும், 396 குடிசைகள் / வீடுகள் பகுதியாகவும் சேதம் அடைந்துள்ளன. இதில் தகுதியுள்ள இனங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை துவங்கவில்லை என்ற போதிலும் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய வடகிழக்கு பருவமழை காலம் என்பதால் 01.10.2021 முதல் ஏற்பட்ட மழை விவரம் கணக்கிடப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் 01.10.2021 முதல் 19.10.2021 முடிய தமிழ்நாட்டிற்கு 148.5 மி.மீ மழை கிடைக்கப்பெற்றுள்ளது. இது 19.10.2021 வரை கிடைக்கப்பெற வேண்டிய இயல்பான மழையளவான 97.9 மி.மீட்டரை விட 52 விழுக்காடு கூடுதலாகும்.

01.10.2021 முதல் 19.10.2021 முடிய அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், மயிலாடுதுறை, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மிக அதிகப்படியான மழையும். செங்கல்பட்டு, சென்னை, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம், இராணிப்பேட்டை, தென்காசி, தேனி, திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் அதிகப்படியான மழையும், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, இராமநாதபுரம், சேலம், திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இ,யல்பான மழையும், விருதுநகர் மாவட்டத்தில் குறைவான மழையும், தூத்துக்குடி மாவட்டத்தில் மிகக் குறைவான மழையும் பதிவாகியுள்ளது.

**மனித உயிரிழப்பு மற்றும் காயமுற்றவர்கள் விவரம்**

01.10.2021 முதல் 19.10.2021 முடிய 39 உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதோடு மொத்தம் 9 நபர்கள் காயமுற்றுள்ளனர்.

**கால்நடை இறப்பு**

01.10.2021 முதல் 19.10.2021 வரையிலான காலத்தில் 78 மாடுகளும், 68 செம்மறி ஆடு / வெள்ளாடுகளும், 12 கோழிகளும் இறந்துள்ளன.

**வீடுகள் / குடிசைகள் சேத விவரம்**

நாளது தேதி வரை 429 குடிசை வீடுகள் பகுதியாகவும், 56 குடிசைகள் முழுமையாகவும், 245 வீடுகள் பகுதியாகவும், 16 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

**நிவாரண மையங்கள்**

கன்னியாகுமரி மாவட்டத்தில், 07 நிவாரண மையங்களில் மொத்தம் 337 நபர்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

**இந்திய வானிலை ஆய்வு மையம் முன்னறிவிப்பு – 19.10.2021**

**தமிழக கடற்கரையை ஒட்டி நிலவும் வளிமண்டலவ மேலடுக்கு சுழற்சியின் காரணமாக**

| | |
|---|---|
| 20.10.2021 மற்றும் 21.10.2021 | தென் மாவட்டங்கள், உள் மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, மதுரை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், தேனி, திண்டுக்கல், தென்காசி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிக கனமழையும், ஏனைய மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக் கூடும். |
| 22.10.2021 | மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடி மின்னலுடன் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்களில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக் கூடும். |
| 23.10.2021 | வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்களில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக் கூடும். |

**கன மழைப்பொழிவு எச்சரிக்கை**

<u>20.10.2021 மற்றும் 21.10.2021:</u> தென் மாவட்டங்களான இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், மதுரை, உள் மாவட்டங்களான வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களான நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர், தேனி மாவட்டங்களில் அங்கும் இங்குமாகவும், ஒரு சில இடங்களிலும் கன மழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

<u>22.10.2021:</u> சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களான நீலகிரி, கோயம்புத்தூர், மாவட்டங்களிலும், ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

<u>23.10.2021:</u> சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் தென்சாசி, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**<u>இடிமின்னல் எச்சரிக்கை</u>**

<u>20.10.2021 – 23.10.2021</u>: தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மற்றும் மின்னல் ஏற்பட வாய்ப்புள்ளது.

**பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- இந்திய வானிலை ஆய்வு மையம் உள்ளிட்ட அமைப்புகளிலிருந்து வரப்பெறும் முன்னெச்சரிக்கை செய்திகள், TNSMART (id), Twitter, Facebook, Whatsapp உள்ளிட்ட சமூக வலைதளங்கள் வாயிலாகவும், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்கும், மீனவர்களுக்கும் உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டு வருகிறது.
- வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னை, சேப்பாக்கத்தில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையமும், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும் கூடுதலான அலுவலர்களுடன் 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. இந்த மையங்களை பொதுமக்கள் முறையே **1070** மற்றும் **1077** என்ற கட்டணமில்லா தொலைபேசிகள் மூலம் தொடர்பு கொள்ளலாம்.
- மேலும், பொதுமக்கள் பேரிடர் காலங்களில் தகவல்களை தெரிவிக்கும் வண்ணம் வாட்ஸ் அப் எண் **9445869848** துவக்கப்பட்டு,

பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் தகவல்கள் / புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மாவட்ட அளவில் பருவமழை காலத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அளிக்கப்பட்டுள்ள **நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை** பின்பற்றுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளுக்கென பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன
- **1,00,988** முதல் நிலை மீட்பாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர், இவர்களில், **18,717** மகளிர் முதல் நிலை மீட்பாளர்கள் ஆவர்.
- கால்நடைகளை பாதுகாக்க **19,541** முதல் நிலை மீட்பாளர்களும், பேரிடர் அல்லாத காலங்களில் மரங்களை நடுவதற்கும், பேரிடர் காலங்களில் பலத்த காற்றினால் விழும் மரங்களை வெட்டி அகற்றுவதற்கும் **15,916** முதல் நிலை மீட்பாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.
- வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில், 19.10.2021 **வரை, 690.07 கிலோ மீட்டர் நீளம் கொண்ட 4227 மழை நீர் வடிகால்கள் தூர் வாரப்பட்டுள்ளன.** மேலும், **30797 Silt Catch Pit–களும் தூர் வாரப்பட்டுள்ளன.**
- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது ஆணையின்படி,** மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில், **11,276,617 கிலோ மீட்டர் நீளமுள்ள மழை நீர் வடிகால்கள் போர்க்கால அடிப்படையில் தூர் வாரப்பட்டுள்ளன.**
- நெடுஞ்சாலைத் துறையால், **133677 பாலங்கள் / சிறு பாலங்களுக்கு** அடியில் உள்ள **கழிவுகள் அகற்றப்பட்டு,** மழை / வெள்ள நீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பொதுப்பணித் துறையின் நீர்நிலைகிளில், **6,618 கி.மீ. நீளத்திற்கு ஆக்கிரமிப்புகள்** அகற்றப்பட்டுள்ளதோடு, **18,626 கி.மீ. நீளத்திற்கு** நீர்நிலைகளின் **கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.**
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால், **1.12 இலட்சம் மின் கம்பங்களும் 25,000 கி.மீ. நீளம் கொண்ட மின் கடத்திகள் மற்றும் 8000 மின் மாற்றிகள் தயார் நிலையில்** வைக்கப்பட்டுள்ளன. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பழுதடைந்த **17,316 மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளதோடு, 613 கி.மீ. நீளம் கொண்ட பழைய மின்கடத்திகளும் மாற்றப்பட்டுள்ளன.** மேலும், **தாழ்வாக செல்லும் 39804 கி.மீ.** நீளம் கொண்ட **மின்கடத்திகள் சரிசெய்யப்பட்டுள்ளது** என்றும், **45,754 Pillar Box – கள், உயர்வான**

**இடங்களில் வைக்கப்பட்டுள்ளது** என்றும், 822 **இடங்களில்** ஆபத்தான நிலையில், வெளியில் தெரியும் **கம்பி வடங்கள் (Exposed cables) சீரமைக்கப்பட்டுள்ளன.**

- பேரிடர் காலங்களில் வானிலை முன்னறிவிப்புகளை **மீனவர்களுக்கு** உடனுக்குடன் தெரிவிக்க 21000 **உயர் VHF கருவிகளும், 600 செயற்கைகோள் தொலைபேசிகளும்,** 296 NAVTEX and NAVIC உபகரணங்களும் மீனவர்களுக்கு **வழங்கப்பட்டுள்ளது.**
- மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை தாமதமின்றி வழங்கவும், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரவும், அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்திடவும், நிவாரண முகாம்களில் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்கவும், குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவைப்படும் பால், ரொட்டி, உணவு, மருந்துகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்திடவும், மழைக்காலங்களில் தொற்று வியாதிகள் / டெங்கு போன்றவை பரவாமல் இருக்கவும், தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை காலத்தில் ஏற்படும் பேரிடர்களை திறம்பட எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு மாநிலம் எவ்வகையான பேரிடரையும் எதிர்கொள்ளும் வகையில் தயார் நிலையில் உள்ளது.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இன்று (20.10.2021), பேரிடருக்கு முன்னரும், பேரிடரின் போதும், பேரிடருக்கு பின்னரும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்கும் நிலையான வழிகாட்டு நடைமுறைகளை வெளியிட்டார்கள். மேலும், பேரிடரின் போது பல்துறை அலுவலர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ள ஏதுவாக, பல்வேறு துறைகளின் தொலைபேசி / அலைபேசி விபரங்கள் அடங்கிய அவசர கால கையேடு ஒன்றையும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்வில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குனர் திரு. சுப்பையன், இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

| தேடல் மற்றும் மீட்பு உபகரணங்கள் | | |
|---|---|---|
| **பெருநகர சென்னை மாநகராட்சி** | | |
| **வ. எண்.** | **உபகரணங்கள்** | **எண்ணிக்கை** |
| 1 | நீர் இறைப்பான் | 570 |
| 2 | நடமாடும் மரம் அறுக்கும் இயந்திரம் | 360 |
| 3 | உயர் கோபுர மரம் அறுக்கும் வாகனங்கள் | 6 |
| 4 | ரோபோடிக் எக்ஸ்கவேட்டர் | 4 |
| 5 | மினி ஆம்ஃபியன் இயந்திரங்கள் | 2 |
| 6 | ரெகுலர் கம் ஜெட்டிங் இயந்திரங்களும் | 7 |
| **மாவட்டங்கள்** | | |
| 1 | மரம் அறுக்கும் இயந்திரம் | 3915 |
| 2 | JCB | 2897 |
| 3 | ஜெனரேட்டர் | 2115 |
| 4 | ராட்சத பம்புகள் | 483 |
| **தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை** | | |
| 1 | தேடுதல் விளக்குகள் | 1095 |
| 2 | கான்கிரீட் வெட்டிகள் | 61 |
| 3 | ஆழ்துளைக் கிணற்றில் பயன்படுத்தக்கூடிய கருவிகள் | 9 |
| 4 | உயிர் காக்கும் மிதவைகளுடனான ஊதப்படத்தக்க படகுகள் | 125 |
| 5 | இயந்திரம் பொருத்தப்பட்ட ஊதப்படத்தக்க படகுகள் | 73 |
| 6 | இயந்திரமயமாக்கப்பட்ட Fibre படகுகள் | 8 |
| 7 | தூக்கு படுக்கை | 336 |
| 8 | ஜெனரேட்டருடன் அதிக திறன் கொண்ட மர அறுப்பான்கள் | 80 |
| 9 | ஜெனரேட்டருடன் அதிக திறன் கொண்ட மர அறுப்பான்கள் | 300 |
| 10 | உயிர் காப்பான் மிதவை | 4770 |
| 11 | உயிர்காக்கும் சட்டை | 3419 |
| **தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை** | | |
| 1 | ஆம்ஃபியன் படகுகள் | 2 |
| 2 | பாப் கேட் உபகரணம் | 2 |
| 3 | பாட்டரியால் இயக்கப்படும் ஸ்பெரட்டர் | 6 |
| 4 | தெர்மல் இமேஜிங் புகைப்படக் கருவிகள் | 6 |
| 5 | தண்ணீர் ஜெட்டிகள் | 450 |
| 6 | அதி நவீன புகைப்படக்கருவிகள் | 48 |
| 7 | வாக்கி டாக்கி | 72 |
| 8 | தொலைத்தொடர்பு ரிப்பீட்டர்கள் | 12 |
| 9 | ரெஸ்கியு லைன் லான்ச்சர் கிட் | 12 |
| 10 | ஹேமர் டிரில்கள் | 6 |
| 11 | சுவாசக் கருவிகள் | 12 |

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9